'' கண்ணைக் காப்பது இமை ''
'' மண்ணைக் காப்பது மழை ''

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2012-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 28-ஆம் நாள் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

*-*-*-*-*-*

**அ) திருக்குறள் :** **“ நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**
**மறைமொழி காட்டி விடும் ”**

**பொருள் :** **பயன் நிறைந்த சொற்களையுடைய துறவியரின் பெருமையை, நிலவுலகத்தில் அவர் ஆணையாகச் சொல்லிய மந்திரங்களே கண்கூடாகக் காட்டிவிடும்**

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்.245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**1) <u>சி.டபிள்யு.2/ 007036/2012</u>**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)ன்படி **25.07.2012**-ம் தேதி நடைபெற்ற கணக்கு குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : கணக்கு குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

<u>மாமன்றத்தீர்மானம் எண்.288</u>
<u>பதிவு செய்யப்பட்டது</u>

**2) <u>சி.டபிள்யு.2/1338/2012</u>**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)ன்படி **05.09.2012**-ம் தேதி நடைபெற்ற வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

<u>மாமன்றத்தீர்மானம் எண்.289</u>
<u>பதிவு செய்யப்பட்டது</u>

**3) சி.டபிள்யு.2/ 40475/2011**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)–ன்படி 06.11.2012-ம் தேதி நடைபெற்ற சுகாதாரகுழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : சுகாதாரகுழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்றத்தீர்மானம் எண்.290**

**பதிவு செய்யப்பட்டது**

**4) B15/028647/12**

மதுரை மாநகராட்சி பணியாளர்களுக்கு நிதி துறை அரசாணை எண்.388, நாள்: 06.11.12-ன்படி பண்டிகை கால முன்பணம் ரூ.2000/-த்திலிருந்து ரூ.5000/- ஆக உயர்த்தி 2012-13-ஆம் ஆண்டு முதல் ஆணையிடப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சி பணியாளர்களுக்கு பண்டிகை கால முன்பணம் ரூ.5000/-ம் வழங்க வணக்கத்திற்குரிய மேயர் அவர்களிடம் 08.11.2012-ல் முன் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்ற விபரத்தினை மாமன்ற தகவலை வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.291**

**பதிவு செய்யப்பட்டது**

**5) Cw1/29272/12**

மதுரை மாநகராட்சி மாமன்றப் பிரிவின் அவசர அத்தியாவசிய தேவைகளுக்கு ஏற்படும் சில்லறை செலவினங்களுக்கு (பேப்பர், பிரிண்டர் டோனர் மற்றும் Computer உதிரி பாகங்களில் ஏற்படும் கோளாறுகள் சரிசெய்யும் செலவினம்) அவ்வப்போது பணம் தேவைப்படுகிறது. இதற்கான சாதல்லார் (Imprest Amount) தொகை கணக்கினை மாமன்றச்செயலாளர்(பொ) அவர்கள் பெயரில் ரூ.**5000/–** (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) தோற்றுவிக்கவும், அவ்வப்போது தொகையினை மீளப்பெறவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.292**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**6) ம.நி.3/29817/12**

மதுரை மாநகராட்சியுடன் புதிததாக இணைக்கப்பட்டுள்ள வார்டுப் பகுதிகளான மண்டலம் 3–ல் வார்டு எண்.59,60,61,62 மற்றும் மண்டலம் 4–ல் வார்டு எண்.94 ஆகிய வார்டு பகுதிகளுக்கு சீராக குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு தச்சம்பத்து தலைமை குடிநீரேற்று நிலையம் மற்றும் வில்லாபுரம் குடிநீரேற்று நிலையம் ஆகிய இடங்களில் ஒப்பந்த அடிப்படையில் நான்கு பணியாளர்கள் கடந்த 01.04.2011 முதல் 31.03.2012 வரை ஒரு வருடத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.14000/- வீதம் அவனியாபுரம் நகராட்சி மன்றத்தின் ஒப்புதல் பெற்று பணிபுரிந்து வருகின்றனர். இந்நிலையில் மேற்படி அவனியாபுரம் நகராட்சி பகுதியானது மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டதன் காரணத்தினாலும் இப்பணியாளர்களின் ஒப்பந்த காலம் கடந்த 31.03.2012 அன்றுடன் முடிவடைந்த நிலையிலும் மேற்படி பணியாளர்களின் சப்ளை உத்திரவு காலத்தினை 01.04.2012 முதல் 31.03.2013 வரை ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்யவும் மேற்படி பணியாளர்களுக்கு கடந்த 01.04.2012 முதல் 31.10.2012 வரை உள்ள மாதங்களுக்கு ரூ.14000/- வீதம் ஏழு மாதங்களுக்கு மொத்தம் நிலுவையில் உள்ள ரூ.98000/- வழங்குவதற்கும் 01.11.2012 முதல் 31.03.2013 வரை ஆகிய மாதங்களுக்கு தொடர்ந்து ஊதியம் வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.293**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**7) ந.பொ. 1/17333/12**

மதுரை மாநகராட்சிப் பகுதிகளில் தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் பாதாள சாக்கடை பணிகள் நிறைவேற்றப்பட்ட போது பழுதடைந்த சாலைகளையும் இரண்டாவது வைகை குடிநீர் திட்டத்தின் கீழ் குழாய்கள் அமைக்கப்பட்ட சாலைகளையும் மற்றும் வெள்ள சேதத்தினால் பாதிக்கப்பட்ட சாலைகளையும் மற்றும் மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் அமைந்துள்ள முக்கிய சாலைகளையும் சீரமைக்க வேண்டி **59.517** கி.மீ. நீளத்திற்கு ரூ. **24.06** கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டு ''தமிழ்நாடு நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் **2012**ன்'' கீழ் நிதி ஒதுக்கீடு செய்யக் கோரி ஏற்கனவே கடிதம் மற்றும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

| வ. எண் | சிப்பம் எண் | வார்டு எண் | சாலை யின் வகை | பணியின் பெயர் | நீளம் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சம்) | சிப்ப மொத்த தொகை (ரூ. இலட்சம்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* | *7* | *9* | *10* |
| 1 | சிப்பம் 1 | 1 | தார் சாலை | வானொலி நிலையம் மற்றும் அசோக் நகர் 3வது தெருவில் மழைநீர் வடிகால் அமைத்து, தார் சாலை புதுப்பித்தல் | 590.00 | 8.00 | 50.00 | 413.40 |
| 2 | | 2 | தார் சாலை | செக்டார் 4வது குறுக்கு சாலையில் தார் சாலை புதுப்பித்தல் | 1500.00 | 5.00 | 51.40 | |
| 3 | | 3 | தார் சாலை | கே.ஆர்.வி.எம். காம்பளக்ஸ் முதல் கோமதி நகர் கடைசி மற்றும் பார்க் டவுன் 2வது தெருவில் தார் சாலை புதுப்பித்தல் | 1350.00 | 5.50 | 50.00 | |
| 4 | | 4 | தார் சாலை | டோபாஸ் ரோடு முதல் ஜே.ஜே.நகர், எஸ்.வி.பி.நகர் கடைசி வரை சுற்றுச்சுவர் மற்றும் தார் சாலை புதுப்பித்தல் | 1500.00 | 6.00 | 50.00 | |
| 5 | | 23 | தார் சாலை | சொக்கநாதபுரம் மெயின் ரோடு மற்றும் நேதாஜி மெயின் ரோட்டில் தார் சாலை புதுப்பித்தல் | 1215.00 | 6.00 | 50.00 | |
| 6 | | 5 | தார் சாலை | டாக்டர்.ராதாகிருஷ்ணன் ரோடு, சேக்கிழார் 2வது தெரு, சேக்கிழார் குறுக்குத் தெரு, விநாயகர் கோவில் தெரு மற்றும் குறுக்குத் தெருவில் தார் சாலை புதுப்பித்தல் | 768.00 | 6.00 | 28.50 | |
| 7 | | 7 | தார் சாலை | சர்ச் ரோட்டில் தார் சாலை புதுப்பித்தல் | 350.00 | 9.00 | 18.00 | |
| 8 | | 18 | தார் சாலை | ஜானகிநாராயணன் தெரு, பார்த்தசாரதி தெரு, சுப்பிரமணியன் பிள்ளை தெரு மற்றும் பாரதியார் ரோடு தெற்கு பக்கம் தார் சாலை புதுப்பித்தல் | 1130.00 | 6.00 | 40.50 | |
| 9 | | 19 | தார் சாலை | தானத்தவம் மெயின் ரோட்டில் தார் சாலை புதுப்பித்தல் | 1650.00 | 4.50 | 53.00 | |
| 10 | | 22 | தார் சாலை | முத்து தேவர் காலனி மெயின் மற்றும் 1 முதல் 5வது குறுக்குத் தெருக்களில் தார் சாலை புதுப்பித்தல் | 689.00 | 5.00 | 22.00 | |
| 11 | சிப்பம் 2 | 39 | தார் சாலை | எப்.எப்.ரோடு, அரசகிழவன் தெரு மற்றும் மாரியம்மன் கோவில் தெருவில் தார் சாலை புதுப்பித்தல் | 763.00 | 8.00 | 30.00 | 455.60 |
| 12 | | 40 | தார் சாலை | அகிம்சாபுரம் 6வது விரிவாக்கத்தில் தார் | 330.00 | 7.00 | 23.50 | |

| வ. எண் | சிப்பம் எண் | வார்டு எண் | சாலை யின் வகை | பணியின் பெயர் | நீளம் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சம்) | சிப்ப மொத்த தொகை (ரூ. இலட்சம்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* | *7* | *9* | *10* |
| | | | | சாலை புதுப்பித்தல் | | | | |
| 13 | | 41 | தார் சாலை | சிங்காரவேலர் காலனி வடக்கு தெருவில் தார் சாலை புதுப்பித்தல் | 409.00 | 6.00 | 14.80 | |
| 14 | | 42 | தார் சாலை | ஔவையார் தெருவில் தார் சாலை புதுப்பித்தல் | 330.00 | 6.00 | 12.00 | |
| 15 | | 24 | தார் சாலை | இ.பி.காலனி மெயின் ரோட்டில் தார் சாலை புதுப்பித்தல் | 1250.00 | 5.00 | 48.30 | |
| 16 | | 25 | தார் சாலை | கண்ணனேந்தல் மெயின் ரோட்டில் தார் சாலை புதுப்பித்தல் | 1400.00 | 6.00 | 52.00 | |
| 17 | | 26 | தார் சாலை | பரசுராம்பெட்டி மெயின் ரோட்டில் தார் சாலை புதுப்பித்தல் | 1600.00 | 5.50 | 58.00 | |
| 18 | | 28 | தார் சாலை | மங்களகுடி மெயின் ரோட்டில் தார் சாலை புதுப்பித்தல் | 1280.00 | 4.80 | 43.50 | |
| 19 | | 29 | தார் சாலை | மாசதான்பட்டி மெயின் ரோட்டில் தார் சாலை புதுப்பித்தல் | 1850.00 | 5.00 | 52.00 | |
| 20 | | 30 | தார் சாலை | வள்ளார் மெயின் ரோட்டில் தார் சாலை அமைத்தல் | 1375.00 | 5.00 | 49.00 | |
| 21 | | 31 | தார் சாலை | பாண்டியன் மெயின் ரோட்டில் தார் சாலை அமைத்தல் | 900.00 | 5.50 | 45.50 | |
| 22 | | 32 | தார் சாலை | அன்னை நகர் மெயின் ரோட்டில் தார் சாலை அமைத்தல் | 567.00 | 5.00 | 27.00 | |
| 23 | சிப்பம் 3 | 50,51,52 | தார் சாலை | கிழமாசி வீதி, வடக்கு மாசி வீதி, மேல மாரட் வீதி, ஒபுளாபடித்துறை ரோடு மற்றும் வெங்கடபதி ஐயங்கார் தெருவில் தார் சாலை அமைத்தல் | 569.00 | 9.00 | 44.10 | 418.70 |
| 24 | | 63 | தார் சாலை | பாவற்காய் மண்டபம் எதிரில் உள்ள தெரு சந்திப்பு முதல் நல்லமுத்து பிள்ளை ரோடு வாய்க்கால் சந்திப்பு வரை தார் சாலை அமைத்தல் | 280.00 | 6.50 | 10.50 | |
| 25 | | 55 | தார் சாலை | கல்லாம்பள் ரோடு மற்றும் ராஜா நகரில் தார் சாலை புதுப்பித்தல் (பாபு நகர் முதல் கல்லாம்பள் ரோடு வரை) | 1695.00 | 4.00 | 51.10 | |
| 26 | | 56 | தார் சாலை | சின்ன அனுப்பானடி TNHB மெயின் ரோட்டில் தார் சாலை புதுப்பித்தல் | 1190.00 | 7.00 | 54.60 | |
| 27 | | 58 | தார் சாலை | கிழக்கு தெரு, கண்ணன் காலனி மற்றும் கண்மாய்க்கரை தெருவில் தார் சாலை புதுப்பித்தல் | 1240.00 | 5.00 | 51.15 | |

| வ. எண் | சிப்பம் எண் | வார்டு எண் | சாலை யின் வகை | பணியின் பெயர் | நீளம் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சம்) | சிப்ப மொத்த தொகை (ரூ. இலட்சம்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* | *7* | *9* | *10* |
| 28 | | 59 | தார் சாலை | எம்.ஜி.ஆர்.மெயின் மற்றும் குறுக்குத் தெரு, வாசுகி மெயின் மற்றும் குறுக்குத் தெரு, மீனாட்சி நகர் 4வது தெரு, சுப்பிரமணிய கோனார் தெரு, அன்னை அபிராமி தெரு, கணபதி நகர், ஆசாத் தெரு, நாகம்மாள் தெரு மற்றும் ஓம்சக்தி மெயின் மற்றும் குறுக்குத் தெருவில் தார் சாலை புதுப்பித்தல் | 1520.00 | 4.00 | 53.25 | |
| 29 | | 60 | தார் சாலை | செம்பொன் ஊரணி ரோடு, வள்ளாந்தபுலம், செல்வ விநாயகர் தெரு, பிரசன்னா காலனி மற்றும் அயன்பாப்பாகுடி ரோட்டில் தார் சாலை புதுப்பித்தல் | 1395.00 | 4.00 | 52.35 | |
| 30 | | 61 | தார் சாலை | TNHB மெயின் ரோடு, மாற்றுத்திறனாளி அலுவலகம் மெயின் மற்றும் குறுக்குத் தெருவில் தார் சாலை புதுப்பித்தல் | 1710.00 | 4.00 | 51.50 | |
| 31 | | 62 | தார் சாலை | காமாராஜ் தெரு, கதிர்வேல் நகர் காம்பவுண்டு, சிவராமியார் தெரு, ஹீசேன்அலிப் தெரு, மீனாட்சி நகர் 4வது தெரு, முத்துராமலிங்கம் தெரு மற்றும் துளசிராம் தெருவில் தார்சாலை புதுப்பித்தல் | 1680.00 | 4.00 | 50.15 | |
| 32 | சிப்பம் 4 | 76 | தார் சாலை | ஏரிக்கரை ரோடு, ஷாலினி தெரு மற்றும் கன்னிகா தெருவில் தார் சாலை புதுப்பித்தல் | 930.00 | 5.50 | 46.50 | 402.10 |
| 33 | | 84 | தார் சாலை | மேலபட்டமார் மற்றும் வடக்கு கோபுர தெருவில் தார் சாலை அமைத்தல் | 216.00 | 7.00 | 9.50 | |
| 34 | | 85 | தார் சாலை | சொக்கப்பன் நாயக்கர் தெரு, மீனாட்சி தெரு மற்றும் தெற்கு ஆவணி மூல வீதியில் தார் சாலை அமைத்தல் | 1046.00 | 9.00 | 64.50 | |
| 35 | | 94 | தார் சாலை | பெரியசாமி நகர் மெயின், எம்.எம்.சி.காலனி முதல் டிவிஎஸ் நகர், மற்றும் பாம்பன் நகரில் தார் சாலை அமைத்தல் | 760.00 | 4.00 | 22.10 | |
| 36 | | 94 | தார் சாலை | திருப்பரங்குன்றம் முதல் வெள்ளக்கல் சந்திப்பு வரை | 1000.00 | 4.00 | 31.70 | |

| வ. எண் | சிப்பம் எண் | வார்டு எண் | சாலை யின் வகை | பணியின் பெயர் | நீளம் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சம்) | சிப்ப மொத்த தொகை (ரூ. இலட்சம்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* | *7* | *9* | *10* |
| | | | | தார் சாலை அமைத்தல் | | | | |
| 37 | | 94 | தார் சாலை | வெள்ளக்கல் முதல் அருப்புக்கோட்டை மெயின் ரோடு வரை தார் சாலை அமைத்தல் | 800.00 | 4.00 | 22.10 | |
| 38 | | 95 | தார் சாலை | தியாகராஜர் காலனி, அம்பேத்கர் நகர், ராயப்பன் நகர் மற்றும் பெராகா நகரில் தார் சாலை அமைத்தல் | 1270.00 | 5.25 | 51.50 | |
| 39 | | 96 | தார் சாலை | பெரிய கார் தெரு, நிலையூர் ரோடு முதல் திருப்பரங்குன்றம் வரை மழைநீர் வடிகால் அமைத்தல் மற்றும் தார் சாலை புதுப்பித்தல் | 170.00 | 4.50 | 16.00 | |
| 40 | | 97 | தார் சாலை | நேதாஜி மெயின் தெரு, NH 7 முதல் அமைதிசோலை தெரு வரை தார் சாலை அமைத்தல் | 250.00 | 4.00 | 6.00 | |
| 41 | | 98 | தார் சாலை | நேருஜி மெயின் தெரு 3வது பேருந்து நிறுத்தம் முதல் 5வது நிறுத்தம் வரை தார் சாலை அமைத்தல் | 450.00 | 8.00 | 21.00 | |
| 42 | | 98 | தார் சாலை | வெங்கடேஸ்வரா மெயின் தெரு NH 7 முதல் பால் டிப்போ வரை தார் சாலை அமைத்தல் | 300.00 | 4.00 | 7.00 | |
| 66 | | 48 | தார் சாலை | அங்கயற்கன்னி மெயின் ரோட்டில் தார் சாலை புதுப்பித்தல் | 1250.00 | 5.00 | 49.20 | |
| 67 | | 49 | தார் சாலை | விஸ்வசாந்தி நகர் மற்றும் மயில் நகரில் தார் சாலை புதுப்பித்தல் | 1370.00 | 5.00 | 55.00 | |
| 47 | சிப்பம் 5 | 8 | பேவர் பிளாக் சாலை | எம்.ஜி.ஆர்.தெரு, ராமமூர்த்தி தெரு, பெரியார் தெரு, அன்னை தெரசா தெரு, தாசில்தார் தெரு, மருதுபாண்டியர் தெரு மற்றும் 40 வீடு பர்மா காலனியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 1425.00 | 3.90 | 56.40 | 487.50 |
| 48 | | 20 | பேவர் பிளாக் சாலை | சந்தன மாரியம்மன் கோவில் தெரு மற்றும் சந்தன மாரியம்மன் கோவில் வடக்கு முதல் தெற்கு ரோடு வரை பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 303.00 | 3.40 | 12.00 | |
| 49 | | 21 | பேவர் பிளாக் சாலை | காமராஜர் 1வது தெரு, எழில் தெரு, பகவத்சிங் தெரு, விவேகானந்தா தெரு, ஜீவா தெரு, காந்தி தெரு, அகஸ்தியர் தெரு மற்றும் பூமாரியம்மன் கோவில் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 1573.00 | 3.30 | 50.50 | |

| வ. எண் | சிப்பம் எண் | வார்டு எண் | சாலை யின் வகை | பணியின் பெயர் | நீளம் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சம்) | சிப்ப மொத்த தொகை (ரூ. இலட்சம்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* | *7* | *9* | *10* |
| 62 | | 37 | பேவர் பிளாக் சாலை | அம்பேத்கர் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 691.00 | 4.90 | 30.00 | |
| 63 | | 38 | பேவர் பிளாக் சாலை | சுயராஜ்யபுரம் குறுக்குத் தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 825.00 | 5.00 | 45.80 | |
| 64 | | 44 | பேவர் பிளாக் சாலை | மானகிரி வடக்கு மற்றும் குறுக்குத் தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 1413.00 | 3.50 | 64.00 | |
| 65 | | 44 | பேவர் பிளாக் சாலை | லூர்து நகர் குறுக்குத் தெரு மற்றும் திரௌபதியம்மன் கோவில் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 298.00 | 4.20 | 15.00 | |
| 50 | | 51,52, 54,57 | பேவர் பிளாக் சாலை | இஸ்மாயில்புரம் 4,6,9 மற்றும் 18வது தெரு, ஒலைப்பட்டினம் 2வது மற்றும் குறுக்குத் தெரு, இங்கிலிஷ் கிளப் தெரு, பழைய இங்கிலிஷ் கிளப் தெரு, சித்து பாலகிருஷ்ணன் தெரு, உடற்பயிற்சி பகுதி, மருதுபாண்டியர் மெயின் மற்றும் 1,4,5 மற்றும் 6வது தெரு, தெய்வக்கன்னி தெரு, அயோத்தி கோவில் தெரு, ஊரணிகிணற்று தெரு, காமாட்சியம்மன் கோவில் மெயின் தெரு மற்றும் வாசுகி தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 1983.00 | 5.00 | 99.00 | |
| 51 | | 65 | பேவர் பிளாக் சாலை | பாண்டிய விநாயகர் கோவில் தெரு, சப்பானி கோவில் கிழக்கு தெரு, பள்ளிக்கூட தெரு மற்றும் சப்பானி கோவில் மேற்கு தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 372.00 | 3.50 | 14.00 | |
| 52 | | 66 | பேவர் பிளாக் சாலை | வைக்கோல்கார தெரு மற்றும் தென்னோலைகார 2வது தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 301.00 | 4.50 | 14.00 | |
| 53 | | 67 | பேவர் பிளாக் சாலை | பாவுக்கார தெரு, ஆறுமுக ஆசாரி தெரு மற்றும் ரெங்கன் ஆசாரி தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 342.00 | 3.50 | 14.00 | |
| 54 | | 69 | பேவர் பிளாக் சாலை | நாகுபிள்ளை தெரு, வீம பிள்ளை தோப்பு, ஒ.வி.ஆர். 1வது மற்றும் 2வது தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 355.00 | 4.00 | 15.00 | |
| 43 | | 75 | பேவர் பிளாக் சாலை | பொட்டு ஊரணி 1,2,3 வது தெரு, தண்டல்காரன்பட்டி 1 முதல் 6வது தெரு வரை பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 965.00 | 4.30 | 42.50 | |

| வ. எண் | சிப்பம் எண் | வார்டு எண் | சாலையின் வகை | பணியின் பெயர் | நீளம் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சம்) | சிப்ப மொத்த தொகை (ரூ. இலட்சம்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* | *7* | *9* | *10* |
| 61 | | 100 | சிமெண்ட் கான்கிரிட் சாலை | தமிழ் அரசி தியேட்டர் தெரு, பாலநாகம்மாள் கோவில் மேட்டு தெரு, பாலநாகம்மாள் கோவில் தெரு மற்றும் நாடக மேடை நுழைவு பகுதியில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | 352.00 | 5.00 | 15.30 | |
| 44 | சிப்பம் 6 | 77 | பேவர் பிளாக் சாலை | எம்.எம்.ரோடு, நியூ ரைஸ்மில் 2வது தெரு, சொக்கத்தான் ஊரணி ரோடு, கணேசன் தெரு, லெட்சுமிபுரம் ரோடு, இ.இ.ரோடு, கோவில் பின்புற ரோடு மற்றும் மகாலட்சுமி தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 849.00 | 4.70 | 44.00 | 228.95 |
| 45 | | 79 | பேவர் பிளாக் சாலை | கிளாஸ்கார தெரு, மண்டையன் ஆசாரி லைன், ஆதம்சா ஷாகிப் லைன் மற்றும் அயோத்தி கோவில் லைனில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 1004.00 | 4.00 | 40.00 | |
| 46 | | 88 | பேவர் பிளாக் சாலை | சித்தி விநாயகர் கோவில் தெரு, ஐயப்பன் நகர் 1வது தெரு, இந்திரா நகர் 1 முதல் 4வது தெரு வரை பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 490.00 | 4.50 | 25.00 | |
| 55 | | 92 | பேவர் பிளாக் சாலை | அங்கயற்கன்னி 1வது தெரு முதல் 5வது தெரு வரை பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 774.00 | 4.80 | 47.00 | |
| 56 | | 95 | பேவர் பிளாக் சாலை | இடையார் தெரு மற்றும் கள்ளர் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 235.00 | 3.00 | 10.00 | |
| 57 | | 96 | பேவர் பிளாக் சாலை | ராஜீவ் காந்தி நகர், அவனியாபுரம் ரோடு முதல் கிழக்கு தெரு வரை பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 155.00 | 4.50 | 8.50 | |
| 58 | | 96 | பேவர் பிளாக் சாலை | திருமலையூர் மெயின் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 220.00 | 4.50 | 14.00 | |
| 59 | | 97 | பேவர் பிளாக் சாலை | நெல்லையப்பபுரம் மெயின் தெரு NH 7 முதல் குறுக்குத் தெரு வரை பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 280.00 | 4.70 | 16.00 | |
| 60 | | 99 | பேவர் பிளாக் சாலை | தேவி நகர் குறுக்குத் தெரு, சந்திராபாளையம் 1, 2 மற்றும் 3வது குறுக்குத் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 425.00 | 4.35 | 24.45 | |
| | | | | **மொத்தம்** | **59517.00** | | **2406.25** | **2406.25** |

மேற்கண்டவாறு சிப்பங்கள் வாரியாக பணிகள் பிரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் ஒப்புதல் பெறப்பட்டதற்கும் ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கவும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்ஒப்புதல் பெறப்பட்டதற்கும் மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.294**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**8)** ம.பொ. 4/ம.எண். 1472 / 11-12

மதுரை மாநகராட்சி, மண்டலம் 4 வார்டு எண். 100ல் பைக்காரா அரசினர் காலனி பாரதிதாசன் நகர் பகுதியில் மழைக்காலங்களில் மழைநீர் எளிதில் வழிந்தோட வழியில்லாமல் தேங்கி சாலையில் காணப்படுவதால் சாலைகள் சேதமடைந்தும் பொதுமக்களுக்கும் மிகவும் இடையூறாக உள்ளது. எனவே மேற்படி பகுதியில் ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால் அமைக்க கீழ்க்கண்டவாறு இரண்டு மதிப்பீட்டுப் பணிகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

| **வ. எண்.** | **மதிப்பீட்டு எண் மற்றும் பணியின் விபரம்** | **மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|
| *1* | *2* | *3* |
| 1. | ம.பொ. 4/ம.எண். 1472/11-12<br>மண்டலம் 4, வார்டு எண். 100ல் பைக்காரா அரசினர் காலனி பாரதிதாசன் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 49.50 |
| 2. | ம.பொ. 4/ம.எண். 1473/11-12<br>மண்டலம் 4, வார்டு எண். 100ல் பைக்காரா அரசினர் காலனி பாரதிதாசன் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 49.50 |

மேற்கண்டவாறு இரண்டு பணிகளுக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டு கடந்த 12.07.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் M/s. S.R.M. Enterprises, Madurai என்ற நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்தினை காட்டிலும் 5.35% சதவீதம் கூடுதலாகவும் திரு.K.R. கண்ணன், மதுரை அவர்கள் 6.41% சதவீதம் கூடுதலாகவும் தெரிவித்திருந்தார்கள். இந்நிலையில் L 1 ஒப்பந்தக்காராகிய M/s. S.R.M. Enterprises நிறுவனத்தாரிடம் விலை குறைப்பு செய்யக் கோரப்பட்டது. மேற்படி பணிகளுக்கு மதிப்பீட்டு விலை விகித்தினை காட்டிலும் 3% சதவீதம் கூடுதலாக செய்து தருவதற்கு சம்மதம் அளிக்கப்பட்டதன் பேரில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்ஒப்புதல் பெறப்பட்டு M/s. S.R.M. Enterprises நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.295**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**9) CW1/027196/2012**

மதுரை மாநகராட்சியில் கருணை அடிப்படையில் E3/129144/1985-நிர் கோப்பின் நியமனக்குழு தீர்மானம் எண்.292, நாள் 27.01.1989 தீர்மான ஒப்புதலின்படி பணியில் சேர்ந்த திரு.ஏ.லியாகத் அலிகான், இளநிலை உதவியாளருக்கு, பணியில் சேர்ந்த நாள் 13.02.1989 முற்பகல் முதல் பணியினை வரன்முறைப்படுத்தியும், அன்று முதல் கருத்தியலான முறையில் (Paper Increment) வருடாந்திர ஊதிய உயர்வு தொடர்ந்து வழங்கியும், நிலுவைத் தொகை வழங்கப்பட மாட்டாது என்ற நிபந்தனையுடன் மேற்படி பணிவரன்முறைப்பட்ட நாளிலிருந்து 14.02.1999 முற்பகல் முதல் தேர்வு நிலை ஊதிய நிர்ணயம் செய்தும் மற்றும் 15.02.2009 முற்பகல் முதல் சிறப்பு நிலை ஊதியம் நிர்ணயம் செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.296**

**13.2.1989 மு.ப. பணியினை வரன்முறைப்படுத்துவதற்கும், 14.02.1999 மு.ப. முதல் தேர்வு நிலை ஊதிய நிர்ணயம் செய்வதற்கும் மற்றும் 15.02.2009 மு.ப. முதல் சிறப்புநிலை ஊதிய நிர்ணயம் செய்வதற்கும் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 21.11.2012**

# மதுரை மாநகராட்சி

## மாமன்றக் கூட்டம்

# Table Agenda - நாள் : 28.11.2012

**1) Cw1/30532/2012**

சென்னை உள்ளிட்ட 10 மாநகராட்சிகளிலும் மாமன்ற உறுப்பினராக இருக்கும் பொழுது, ஒருவர் காலமாகி விட்டால், அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 03.07.2000-ன் படி அவரது குடும்பத்தினருக்கு குடும்ப பாதுகாப்புத் தொகை **ரூ.50,000/-** (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) வழங்க உத்தரவிட்டுள்ளது.

மேற்படி அரசாணையின்படி வழங்கப்பட்டு வரும் தொகை ரூ.**50,000/-ஐ**, **ரூ.1,00,000/-**உயர்த்தி வழங்குவதற்கு அரசின் பரிந்துரைக்கு அனுப்பி வைக்க, மாமன்றத்தின் ஒப்பதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.297**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**2) ம.நி2/031080/2012**

மதுரை மாநகராட்சி 100 வார்டுகளாக பிரிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் வ.உ.மேயர் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. தற்போது மதுரை மாநகராட்சியில் பல முக்கியமான பணிகள் மத்திய, மாநில அரசின் நிதி உதவிகளுடனும், தனியார் பங்களிப்பு மூலமாகவும் மற்றும் மாநகராட்சி நிதிகளைக் கொண்டும் நடைபெற்று வருகிறது. மற்றும் சிறப்பு திட்டப் பணிகள், சமூக நலப்பணிகள், அத்தியாவசியப்பணிகள் நடைபெற்று வருவதை ஒருங்கிணைப்பு பணி செய்து அரசிற்கும் நகராட்சி நிர்வாக ஆணையாளருக்கும் உரிய ஆவணங்கள் தயாரித்து அனுப்ப வேண்டிய பணி முக்கியப் பணியாக உள்ளது.

தற்போது மதுரை மாநகராட்சி அரசாணை எண். 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26.09.1996-ன்படி "Document Developer" (ஆவணங்கள் தயாரிப்பாளர்) பணியிடம் எதுவும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இதனால் அரசிற்கும் நகராட்சி நிர்வாக ஆணையாளருக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டிய முக்கிய ஆவணங்கள் தயார் செய்து அனுப்பி வைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே மதுரை மாநகராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கென்று முற்றிலும் தற்காலிகமாக தொகுப்பூதியத்தின் அடிப்படையில் "Document Developer" (ஆவணங்கள் தயாரிப்பாளர்) என்ற ஒரு பணியிடத்தை உருவாக்கலாம்.

மேற்கண்ட "Document Developer" (ஆவணங்கள் தயாரிப்பாளர்) பணியிடத்திற்கு முற்றிலும் தற்காலிகமாக தொகுப்பூதியத்தின் அடிப்படையில் உரிய தகுதியுடைய ஒரு பணியாளரை நியமனம் செய்ய உரிய பணியாளரை தேர்வு செய்யலாம். அன்னாருக்கு தொகுப்பூதியத்தின் அடிப்படையில் மாத சம்பளமாக ரூ.10,000/- நிர்ணயம் செய்யலாம். பணியிடம் தோற்றுவிப்பதற்கும், தொகுப்பூதியத்தின் அடிப்படையில் தகுதியான பணியாளர் நியமனம் செய்வதற்கும், தொகுப்பூதியம் வழங்குவதற்கும் இந்த பணியிடத்தை ஓராண்டிற்கு மட்டும் நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.298**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 28.11.2012**

## நன்றி தீர்மானம்–1

கடந்த 15 ஆண்டுகாலமாக சீர்கெட்டு கிடந்த மதுரை மாநகாரட்சியை மீட்டது மட்டுமல்லாமல் மதுரை மாநகராட்சியை சீர்செய்து திட்ட பணிகளுக்காக பட்ஜெட்டில் சிறப்பு நிதியாக ரூ.250 கோடி நிதியை ஒதுக்கீடு செய்து இதன் முதல் கட்டமாக ரூ.116 கோடியை தாய் உள்ளத்தோடு வாரி வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சி தலைவி அம்மா அவர்களுக்கு மதுரை மாநகர மக்களின் சார்பில் இம்மாமன்ற கூட்டம் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

**மாமன்றத்தீர்மானம் எண்.285**

## நன்றி தீர்மானம் – 2

எல்லோரும் எல்லா வளமும் பெற வேண்டும் இங்கு இல்லாமை இல்லை என்ற நிலை உருவாக வேண்டும் என்ற வரலாற்று பொன்மொழிக்கேற்ப மூன்றாவது முறையாக ஆட்சிபொறுப்பேற்று வரலாற்று சிறப்பு மிக்க பொற்கால ஆட்சியை நடத்திவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சி தலைவி அம்மா அவர்கள் தலைமையில் நடைபெறும் வரலாற்று சிறப்புமிக்க தமிழக சட்ட பேரவையின் வைரவிழா காணும் இந்நன் நாளில் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இம்மாமன்றம் நன்றியோடு வாழ்த்துகிறது.

**மாமன்றத்தீர்மானம் எண்.286**

## நன்றி தீர்மானம - 3

புரட்சி தலைவர் எம்.ஜீ.ஆர். அவர்களால் 1982–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சத்துணவுத் திட்டத்தில் தற்பொழுது குழந்தைகளின் விருப்பத்திற்கேற்ப மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சி தலைவி அம்மா அவர்களின் புதிய உணவுவகைகள் கொண்ட முன்னோடித்திட்டமான காய்கறி பிரியாணி, தக்காளி சாதம், சாம்பார் சாதம், கருவேப்பிலை சாதம், கீரை சாதம், காய்கறி கலவை சாதம், புளியோதரை சாதம், எழுமிச்சை சாதம், கொண்டைக்கடலை புலவு, உட்பட 13 வகை கலவை சாதங்களும், மிளகுத்தூள் முட்டை. தக்காளி முட்டை மசாலா, வேகவைத்த முட்டை, முட்டை மசாலா, உட்பட நான்குவகை முட்டை மசாலாக்களும், உணவுமுறையில் மாற்றம் செய்யப்பட்டு இதன்மூலம் ஏழை எளிய மக்களுடைய குழந்தைகளின் ஆரோக்கியத்தையும் அவர்களின் ஊட்டச்சத்து நிலையையும் மேம்படுத்த வழிவகைசெய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இம்மாமன்ற கூட்டம் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

**மாமன்றத்தீர்மானம் எண்.287**